[illegible]

786

# கலிகாலமும்

# கல்லோயாவும்

1ம் பதிப்பு

பெற்றுக்கொள்ளுமிடம்.
M. M. P. M. S.
வ. வி. க. காதர்தீன்
[illegible],
[illegible] ([illegible])

விலை சதம் 15. ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Book owned by Abu Afkar - Sammanthurai.

Shaakir - Sammanthurai. ~~077-1607490~~.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அஸ்ஸலாமு அலைக்கும்.

இதைக் கண்ணுறும் அன்பான சகோதர, சகோதரிகள். அனேகரும் நன்னெறியாய், குணசீலர்களாய், திகழவேணு மென்ற ஒரே நோக்குடன் எனது சிற்றறிவிற்கேற்க இதை இயற்றி சில அன்பர்களின் பரிசோதனைக் கழித்து இயன்ற மட்டும் பிழையற சிறு புஸ்தக ரூபமாய் வெளிப்படுத்துகிறேன். இதில் பிழைகள் தவறுதல்கள், இருப்பின் கற்றறிந்தோர் பெருமனதுடன் அறிவிப்பீர்களாயின், திருத்தமாயும், பெரிதாயும், வெளியிட இருக்கும் மறுபதிப்பில் தங்கள்பெயருடன் பிரசுரிப்பேன்.

வஸ்ஸலாம்.

இங்ஙனம்

சம்மாந்துறை
10-6-53.

ஆக்கியோன்.
மு. மீ. ப முகம்மதுசரீபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய விருத்தம்.

1. நீதி யுநிலையுமிக்க, நினைவுகளனைத்து மொன்றாய்
ஆதி யுமனுதியாகி, அமைத்தெமை ஆளுகின்ற
சோதி யேஇணையிலானே, துணையுனையன்றிவேறு
தோதி லாதெனக்கு முன்றன், துணைமிகு மருளீவாயே

## வெண்பா

2. மக்கா முஹம்மதிற்கும் மற்றுநால்யார்களுக்கும்
மிக்கா மசுஹாபி எல்லோர்க்கும் -- மேதினியில்
தைக்கா தமுழுமென் தன்கவிக்குத்தானுமது
மைக்கா விருட்டிலருள் மதிவெளிச்சம் தாரீரோ [பாட்டில்]

## சந்தம்

3. சார்பாக இவ்வுலகிலே உள்ள சுகோதரரே சரீபின்பாட்டில்
நேர்பாகமுறுகவிதை பிழையேதுமிதில் மீறி நேர்ந்திட்டாலும்
பாராளுமிறையவனுக்காய்பிழைகள் பொறுப்பீர்கள் பாரிலென்றே
ஏராளு மிக்கவியை யிறயவனினருள்பெருக வியற்றினேனே

<u>புது மாடமலங்காரம் என்ற வர்ணமெட்டு.</u>

## ( கண்ணிகள் )

I. புது கல்லோயா வேடிக்கை பார்க்க போவோ மெந்தன்
கண்மணியே, ஓடிவாடி
காலால் நடக்க ஏலாது என்றால்
காறில் போவோம் வாறேன் நாடி

## சரணம்

1. ஆதி பெரியவனேவலைத்தள்ளி நீ
அன்னல் நபிசொல் லலட்சியம் பண்ணி நீ
அக்கை தங்கை மச்சியானதோர் பெண்களும்
அன்பாகவே என்று மாறேழுபேர் கூடி (கல்)
2. பெண்களும் மாண்களும் பேசுவாரிப்படி
பேர் – பெற்றோங்கிய சம்மாந்துறை நகர்
அண்ணலா ஹாகிம் மீராலெவ்வை யீன்றிட்ட
அன்பன் சரீபிதை யாவலாய் பாடினேன் (கல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காப்பிரீ சிங்களர் கண்ட இடமெக்கும்
காடெங்கும் வீடல்லோ கட்டி இருக்கிறார்
ஆதி பெரியனே வலைத்தள்ளி நீ
ஆகாதகாரியமது நலமென்றெண்ணி (கல்)

4, பூவுலகில் செல்வம் பொங்கி எழுந்தாலும்
பொன்னாலே தான்வீடு தன்னாலே கட்டியும்
செத்தவுடனல்லோ தெரிந்திடு மொயிலோடை
சொல்லியும் கேளாத சேயிலைகாள் கூடி (கல்)

5. முன்னாலே நன்னபி தன்னாலுரைத்ததை
முற்று மறந்தாலோ இன்னாள் திருந்திடும்
தன்னால் சஞ்சைவயும் தாங்காமல் கைகொண்ட
சண்டாளிகாள் நீங்கள் தங்கநகைபூண்டே

6, கோயிலுக்குக் கோழி கொண்டு கொடுவென்று
ரூவாம் முஹம்மது நபி முன்னுரைத்ததோ
இன்னுமனேகமிதுபோல் செய்திடும்
ஏக பெரியோ னிடம்போகாகாரியே (கல்)

7. ஆதிநபியு மசுஹாபியார்களும்
அண்ணல் முஹிதினவர் களின்தளிலை
சங்கையுடனான் தலையில் சுமந்திடும்
சரிபென் போன்பாடும் சரித்திரம் கேட்டுமே (கல்லோயா)

தரு

தன்னன நானின நானினா-தன னானின நானன்ன நானினா
தானின நானன்ன னானன்னனா-தன நானா நானின நானன்னா

சரணம்

1. அல்ஹம்து லில்லாஹி ஆண்டவா எமை
அழித்து எழுப்பிடும் வல்லவா !!
உந்த னுதவியால் பாடுறேன்—ஒரு—
—சொற்பிழை வாரமல் காத்திடும் !!

2. வல்லனிறை இரு தூதரே—எமை—மன்றுடி கரைசேர்க்கும் நீதமே!
உம்மைப்புகழ்ந்து யான் பாடுறேன்—ஒரு—
—சொற்பிழை வாரமல் காத்தருள் !!

3. நாற்பத்தி எட்டாமாண்டிலே மிக நன்மைபொருந்திய கல்லோயா
கல்லோயாக் கட்டிடவேலையின்—அந்தக்—
காட்சியைப் பாரடி தோழியே !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ரோட்டுக்கு ரோட்டுள்ள பாலத்தை நின்று—
—நொறுக்கித் தகர்த்து எறிகிறார்
சீமையின் பாலத்தைப் பூட்டியே—நல்ல—
—சிருடன் சிமேந்தும் போடுறார்!

5. காடுசெடியெல்லாம் ரோட்டடி எங்கும் கண்டகண்ட இடம் வீடடி
வீடுட னெப்பிசி வங்களா கடடும் வேடிக்கைபாரடி தோழியே

6. கல்லைத்துளைப்பதுமோர் மெசின் நின்று —
— காட்டினைவெட்டவுமோர் மெசின் !!
மண்வாரிக்கொட்டவுமோர் மெசின் அந்த
—மாயத்தைப்பாரடி தோழியே !

7. காறு லொறியுடன் டிப்பரும்—நல்ல—
—கணக்கற்ற டம்பரும் மண்தோண்டி !
மண்தோண்டி மெசின் செய்யும்வேலையை—எந்தன்—
—மாதர சேகண்ணால் பாரடி !

8. ரோட்டுக்கொத்தும் மெசினோர்புறம்—மிக—
லேபல் பண்ணித்தர வேறொன்று !
பாரங்கொண்டேகின்ற லொறிகளை—எந்தன்—
—பாவையரே கண்ணால் பாரடி

9. மண்லேபல்பண்ணுமெசினுடன்—நின்று—
மலையைப் புரட்டவு மோர் மெசின் !
வேளாண்மை வெட்டுவதும் மெசின்—இந்த—
—வேடிக்கை பாரடிதோழியே!

10. நிலத்தை உழுவவு மோர்மெசின்—கங்கை—
—நீரை இழுக்கவின்னோர் மெசின்
மரங்களைச்சாய்ப்பது யந்திரம்—இந்த—
—மகிழ்ச்சியை கேளடிதோழியே

11. எண்ணை கொண்டுவருவது மோர்மெசின்—எஞ்சின்—
—எண்ணை கொண்டேகவு மோர் மெசின்!
தண்ணீர் கொண்டேக வவுசரும்—இன்னும்—
—சற்று நீகேளடி தங்கையே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இந்து முஸ்லீம்கள், சிங்களர்—நல்ல—
—இணங்கிய வெள்ளையர் காப்பிலி!
வெள்ளையர் செய்திடும் வேலையின்—அந்த—
—வேடிக்கை பாரடி தோழியே!

13. காட்டில் கம்பு கொடி இல்லையே—நாங்கள்—
—காலால் நடக்கவும் தொல்லையே
இக்கினியாகல் வேலைவந்ததால்—நாங்கள்—
—இருந்து நடப்பதும், வல்லையே!

14. கட்டுக்கதவுடன் ரேட்டடி—நல்ல—
—கணக்கற்ற ஒப்பீசு வங்களா!
அம்பாரைப் பாமையும் பார்கலாம்—எந்தன்—
—ஆயிளையே வாடி ஓடியே!

15. வெற்றிதரும் பள்ளி பார்க்கல்லாம்—நல்ல—
—வேடிக்கையும் கண்ணுல் காணலாம்!
கல்லோயா வேடிக்கைபார்க்கல்லாம்—எந்தன்—
—காரிகையே வாடி ஓடியே!

16. எங்கும் நிறைந்திடும் வல்லவா—நல்ல—
—ஏக பெரியோனே தூய்யவா!
பரிகாரி முஹம்மது சரீபைநீ—இந்தப்—
—பாரினில் காத்திடும் ஆண்டவா!

17. ஆதிபெரியோனும் வாழியே எங்கள் ஆலகபிகிளை வாழியே!
சீருடன் எல்லோரும் வாழியே இந்த சேதிமுடிந்ததன் தோழியே

சாதிஏதையா என்ற வர்ண மெட்டு.

பல்லவி

I. ஐபா கோல மீதையா கல்லோயா வேலைதானையா ஐயா (கோல)

அனு பல்லவி

II. நானில மீதினில், நாற்பத்தி, எட்டாம் ஆண்டில்தானையா
அன்பாயதற்குப் பாதைதிருத்த னேமித்தானையா (கோல)

சரணம்

1. பாலமிடித்து பாதைவிரித்துப் பண்பாய் தானையா
பலபலபக்கம் எல்லாஇடமும் ரோட்டுத்தானையா (ஐயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கண்டகண்டஇட மெங்கும் வங்களா கட்டித்தானையா
காடுகள் வெட்டி வீடுகள் கட்டனேமிந்தாரையா ஐயா
3. காப்பிலி சிங்கள ரிந்து முஸ்லீம் கலவன் தானையா
காட்டானைபுலி முதலுள்ளவனத்தினில் வேலைதானையா (கோ)
4. மாட்சிமைதங்கிய மட்டுநகர்க் கல்லோயாதானையா
வளுத்தினன் சம்மாந்துறைபு றமுஹம்மது சரீபென்போனையா
ஐயா கோலமீதையா கல்லோயா வேலைதானையா

### விருத்தம் கல்யாணி

I. வேயொடு ஜீமும், மீம்சேர்லாமும அலிபுடனே
ஹேயொடு றேயும், நேயொடுறேயும் மீமுறுநானதுவும்
றேயும் ஹேயும் எயும் மீமில் முடிவான
மந்திரமிதனை மனதில்தினமும் மறவேனே

### வேறு விருத்தம்

II. அடிமுடி அனைத்துமாகி அமைப்பது மளிப்பதான
கடமையாம் தொழிலை கொண்டகருணைசேர் மன்னு உந்தன்
செங் திருப்பாதந்தன்னை சென்னியில் சூடினேன்யான்
சொற்சிறுதமிழிலென்னுற் துலக்கிடவருள் செய்வாயே.

கண்ணாளைக்காண்பதெப்போ எ. வ. மெட்டு.

---

### பல்லவி

கண்ணாரக் காண்பதெப்போ கரைசேர்க்கும்நபி
அன்னாரைக் காண்பதெப்போ — (கண்)

### அனு பல்லவி

II. அடியேன் வினையகல இருலோகிலும் — (கண்)

### சரணம்

1. விண்ணோர் புகழும் நாதர்—மேலோர்கொண்டாடும் ராஜர்
விண்ணோர் புகழும் நாதர்—மேலோர்கொண்டாடும் ராஜர்
அன்னாரைக் காண்பதெப்போ கரைசேர்நபியை
கண்ணாரக் காண்பதெப்போ
2 மக்கா உதித்தராஜர் மான்மறை கொண்டாடு நீதர்!!
இப்பாரோர் வாழ்த்தும் நாதர் ஏகாந்தமாம் நபியை. (கண்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆலமுன்உண்டான நாதர் —
— அபூஜஹ்லை வென்ற தீரர் !!
கானில் மழையை அழைத்த —
— காஸிம் றசூல் நபியை — (கண்)

4. ஈமானுடைய ராஜர் —
— ஏழைக்கிரங்கும் நீதர்
இபுலீஸை வென்றஎங்கள் —
— ஏகாந்தமாம் நபியை — (கண்)

5. ஹாசீம் குலமே பிறந்த —
— கதிஜா பீவியை மணந்த
காதங்கமழ் வாஷம்தரும் —
— காதிமுலன்பியா நபியை — (கண்)

6. பாரோர் கொண்டாடும் ராஜர் —
— பாய்புகிரி வாழ்த்தும் போஜர்
பாரினில் பாக்கியமானவை —
— பயின்றெடுத்த முஸ்தபாவே — (கண்)

7. வாழ்க்கையை வெறுத்த ராஜர் —
— வல்லோனையே போற்றும் நேசர்
பாரினிலே மாலையிட்டார் —
— பண்பாகவே செய்னம்புவை — (கண்)

8. இறையோன் சமுகத்திலே —
— எக்கின் மாமீதினிலே —
இலங்கு மயிலாயிருந்த —
— ஏகாந்தமாம் நபியை — (கண்)

9. இருளையே அகற்றினோரே —
— ஈமான் புகட்டினோரே
இலங்கும் சூரியனையே —
— இவ்வுலகிற் களைத்தோர் — (கண்)

10, இறையனிடம் மன்றாடுவோர் —
— இசுலாம் பயிர் விதைத்தோர்
இத்தரையிலே அழைத்தார் —
— இலங்கு முழுவான்மதியை — (கண்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கண்ணான நபிநாதர் சின்னோன் —
— மீதருள் கூர்ந்து
கண், முன்னாலே காண்பதெப்போ —
— பிழைகள் மண்ணாகப் போவதெப்போ (கண்)

12. சினோன் சரீபின்கீதம் —
— தன்னில் வரும்பிழைகள்
மன்னா நீ தீர்ப்பதெப்போ—மனமகிழ
கண்ணாரக்காண்பதெப்போ
கரைசேர்க்கும் நபி அன்னாரை காண்பதெப்போ

## பல்லவி

I, கேட்டோர்க் காசைநபிபுகழை—கண்ணால்
பார்க்க ஆசைநான் கொண்டேன். (கேட்)

## அனு பல்லவி எடுப்பு

II. வாவா நபியே என்முகம் பார் பார்
இன்னுமேயின் சரி கம பத நிச
சனித சனித வென — (கேட்)

## சரணம்

1. தாதா மலர்ப்பதத்தை நீதா அடியேன்மனம்
தூதா ஆண்டவனின் வேதா
சரஸ சரஸ மெனபிரிசமருளுமென் மேல் (கேட்)

2. நீதா நின்விதைத்த நாதா நபியே மஹமூதா
எந்தன்பிழைதீர உங்கள்பதம்
தாரா யோர கார பாரப்பிழைகள் கரிகரி சரியென (கேட்)

3. மாயா உலகில்பிழை செயனினிதாகிலும்
செயாமலிருக்க வருள் தாரும் அதனுடனே
சனித, சரி, சனித, கம, பத, நிச, (கேட்)

4. பேயா முலகில் பெண்கள் மாயவலையில் பட்டு
போகாமலென்னை நீங்கள் சேருங்கரை —
— தீரும்பிழை வாருமெந்த நாளுமென்னை காரும் குருவேஎன

5. தாசி உலகில் கெட்டவேசிஎன நிதமும்
பாசமிகவிளைக்கும் தோசி வலையைவெட்டி
வீசியுங்கள் பததைத பூசித்து என்மனதை நேசிக்க நீயருள்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6, கொள்ளையும் கொலையும் பொய்யும் சோழும்
மனதில் சூதும் கொள்ள நினைக்கும் வேசி
தானும் அள்ளியே தீயிலிட்டகொள்ளியென
எரித்து வள்ளல்நபியின் பதம்நாடி (கேட்)

7. வேதனையதிகரித்து அதிநாகள் மனதினுந்து
விழும்பினேன் தமிழிலிதை நானும்
இலங்கிய முஸ்லீம்களே விளங்கினுல்—
—சொற்பிழைகள் துலக்கவேதிருத்திக்
—கவி கூறுமென மொழிந்தேன்.

8. எப்போ வருவீரென தெப்பம் போலேந்தநிலை
அங்குமிங்குமாயலே மோதுமியலிலிதை
எப்போ வருவீர்தூதா இன்னுமென்மீது வாதாவென (கேட்)

9. தப்பியே சரீபுசெய்த இப்பெரும்பிழை பொறுத்து
தருவீர் அருள்புரிவீர் பரிவருவீர்
அசனுசனன்னையின் பாத்திமாவென — (கேட்)

## பல்லவி

ஓதும் மயிலே—கலிமா
ஓதும் குயிலே—நிஜமா — [ஓ]

## அனு பல்லவி

உள்ளமகிழ்ந்தே கீதம்பாடும் மயிலே
உண்மையிலே பேரின்பம் பாடும் குயிலே நிஜமா [ஓ]

## சரணம்

1. வேதமதற் காதுந்தலையான கலிமா—தீனோர்
மேவி ஓதுவாருலகிலேந்துகலிமா தீ அதில்
உள்ள பொருளுலகில் வெல்லுங்கலிமா
ஒகினாலுனக்கு ஏதுவினை பாடுங்கலிம் — [ஓ]

2. சங்கை மிகப்பொருந்தும் சஹாதது கலிமா
தவற விடாமலோதுவீர் இரண்டாம் கலிமா—த—
நாதர் நபிதானுரைத்தாரைந்து கலிமா—அதை—
நாரியருமாடவருமோதும் தினமே—அ— [ஓ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. துன்பமிகவகலும் சுபஹானல்லா கலிமா
சோர்வின்றியே ஓதப்பலன் தருகும் கலிம் சோ! இதில்—
இன்பமிகப்பயிலும் நாலாங்கலிமா
இன்னிலத்திலோதிக்கீதம் பாடும் குயிலே இ (ஓ)

4. அதிகமக்கழித்தானைந்து கலிமா (அ)
அதிலேயும் கடைசியாம் குபிர் கலிமா
அனுதினமுமோத தபருதீர் கலிமா என்றும்
ஆடவரும் பெண்டிருமா யோதுங்குயிலே. (ஓ)

திறந்த கூட்டை என்ற மெட்டு.

## பல்லவி

சிறந்த ஆவி பறந்துபோகும் நேரம் தெரிந்தில்லை!

## அனு பல்லவி

பிறந்தோருலகி, லிறவாரெனுஞ் சொல்லறவே நிஜம்மில்லை
சிறந்த ஆவிபறந்துபோகும் நேரம் தெரிந்தில்லை (சிற)

## சரணம்

1. தெரிந்த சாவை அறிந்துமீறி இருந்தாருமில்லை!
பார்த்த இறைவனை அறிந்து கொளாமல்—
—இருந்தால் பெருந்தொல்லை (சிற)

2. இருண்ட இரவில் பரந்தமதியை திறந்தோர்யார் சொல்லை!
விடிந்தபின்னே விடுத்தோன் பொழுதை நிசந்தானேனில்லை (சிற)

3. அடர்ந்த மாரி வறண்ட கோடை அருள்வோர் யார் சொல்லேன்!
அலைமோதும் கடலாகாய மலை முதல் படைத்தோனவல்லலோ (றசி)

4. மிகப்பெரும் புயலும் மேதினிபதிர்வும் விடுப்போனவனல்லால்
மேதினிமீதிவிவைகளை செய்யும் வல்லாருமில்லை (சிற)

5. அதிரிடிமுளக்கமொளிதரும மின்னல் அருளுபவனல்லா அன்றி
ஆகாய நீலமதிலுறு வெள்ளி படைத்தோன் வேறில்லை (சிற)

6. உலகுள்ள உயிர்கள் ஒன்றேனுந்தவறு உணவழிப்போனிறையோன்
கடைசியில் புவியினில் யாவுமழிவது கடுகேனும் பிசகில்லை (சிற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுதந்திரம் வந்ததென்று சொல்லாதிங்க எ. மெ.*

## பல்லவி

வெளி, வேஷத்தில் முஸ்லீமென்று சொல்லாதிங்க
சும்மா, சொல்லிச்சொல்லி வெறும்வேஷம் கொள்ளாதிங்க (வெ)

## அனுபல்லவி

வஞ்சனைகள் சூது பொய்யும் நெஞ்சைவிட்டு
நீங்கல்ல — நபிமஹான் சொன்ன வார்த்தைபோல
மக்களெல்லாம் நடக்கல்ல — தீன்! மக் (வெ)

## சரணம்

1. சூது வாது இன்றிமனம் துப்பரவாய் தோணல்ல பலர்
தொழும் பள்ளிதேடிப்போய் தொழுது வரக்காணல்ல (வெ)
2. தானங்கேட்டு ஏழைபலர் தள்ளாடிப் போகுது—சிலர்—
தாண்டிவழி போவெனத் தவடையிடிக்குது (வெ
3. அபலைகள் பணத்தைப் பலரபகரித்து வாழுது
அண்ணன் தம்பிமாருள் சண்டை ஆயிரம்பேர் போடுது (வெ)

## வேறு தரு

4. ஏழைப்பெண்கள் கற்பைப்பல காளைகள் அழிக்குது
ஈமானற்ற பேர்கள் சிலர் வீட்டைக்கொழுத்துது
ஜாதிமத முஸ்லீமென்று தவறிலாமலோடுது
சாராயம் கள்ளையுண்டு சாடைபொய்கள் பேசுது (வெளி)
5. தேசமீதில் காளைபலர் வேசை வீட்டைத்தேடுது
காசுபணமுள்ள பெண்கள் வேசையாக மாறுது
சூதுவாது துன்ப வினை சோர்வில்லாமல் மீறுது
தோளர் நேசம் சர்ப்பமதை தொட்டதைப்போலாகுது (வெளி)
6. கொள்ளைலாபம் தேடச்சிலர் கள்ளக்கணக்கு போடுகிறார்
கொண்ட பெண்ணைவிட்டுப்பலர் கூத்திகளைத்தேடுறார்
கள்ளபின் கஞ்சாவை உண்டு கொள்ளையடிக்கப் பார்க்கிறார்
கஸ்டப்படும் ஏழைபலர் கண்ணில் மண்ணைப்போடுறார் (வெளி)
7. பணத்திமிரால் பஞ்சைகளைப் பதைக்கப்பதைக்க வதைக்கிறார்
அஞ்சொகுத்தும் தொளுதுக்கிட்டு அனியாயத்தை தேடுறார்
வஞ்சநெஞ்சம் உள்ளசிலர் வாய்மதங்கள் பேசுறார்
மணவாளரை எதிர்த்துப்பலர் வம்புச்சண்டை போடுறார். (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அயலார் வாளக்கண்டுமனம் ஆத்திரத்தில் கொதிக்கிறூர்
அறநெறியாம் வேதமதை அசட்டை செய்யதூண்டுறூர்
ஆண்டவன் தன்னை யறிந்து அமல் தேடக்காணல்லே
அவ்வல்கலிமாவை ஓதி அஞ்சொகுத்தை பேணல்லே (வெளி)

9. வண்டார்குளல் பெண்கள் பலர் மானம் பறிபோகுது
வாயாடிமாந்தர் பலர் வழியில் சண்டை போடுறூர்
நன்மை தீமையென்று பலர் நாடி நடக்கக் காணல்லே
நங்கையரை காக்காக்க நாடி நவின்றேன் சரிபென் போதுமே
(வெளி)

## தெம்மாங்கு

### பல்லவி

1. காலமது மாறிப்போச்சே கத்தனேவல் தள்ளலாச்சே
வேஷமும் மாறிப்போச்சுதென் கண்ணே தில்லாலே
வெளிக்கோலமாச்சுதடி பெண்ணே தில்லாலே

### கண்ணிகள்

2. கொண்டைக்கு சந்தனுதி கூர்விளிக்குமையுடனே
கழுத்திலே தங்கமடி என் கண்ணே தில்லாலே
இரு காதுக்கு தோடுமடி என் பெண்ணே தில்லாலே

3. மார்புக்குதான் றவிக்கை மலர் முகத்திலே பவுடர்
கையினிலே பொன்வளையலென் பெண்ணே தில்லாலே
இது காலத்தின் கோலமடி என் பெண்ணே தில்லாலே

4. இடையில் சரிகை சேலை இழுத்திழுக்கப்பாவாடை
சேலமும் லங்காவும் என் தங்கத்தில்லாலே
தேசத்திலாச்சுதடி என் பெண்ணே தில்லாலே

5. பட்டுவகை கூடிப்போச்சி பழையசோமன் மாறிப்போச்சி
தங்கம் மிகுந்துபோச்சிதென் கண்ணே தில்லாலே
தருமன் வெள்ளி மாறிப்போச்சிதென் பெண்னே தில்லாலே

6. கொண்டவனை திட்டலாச்சு குலமினமுமாறிப் போச்சு
மானமின்றி மக்களெல்லாம் தங்கத் தில்லாலே
மாநிலத்தில். வம்பாராச்சென் பொன்னே தில்லாலே.

7. காமுகர்கள் நேசமதில் காலம் கடத்த எண்ணி
கணவனுடன் சண்டையிட்டேன் கண்ணே தில்லாலே
கன்னியாலைகிறு ரென் தங்கத் தில்லாலே ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உயர் குலத்தில் பிறந்து ஊரில் பிரபலமாய்
நயந்து காபிர்குலத்தை யென்கண்ணே தில்லாலே
நாரியர்கள் நாடுவதேன் பெண்ணே தில்லாலே.

9. ஆடவர்சொல் தட்டிவிட்டு ஆண்களைப்போல் பேசிக்கொண்டு
ஆகாச்செயலதிலே என் கண்ணே தில்லாலே
ஆரணங்கழியுகிறு ரென்பெண்ணே தில்லாலே.

10. ஆபாசந்தன்னுடனே ஆகாஙினை முழுதும்
நோய் விலக்கிவிட்டாலென் தங்கத்தில்லாலே
நீதி நபிசபா அத்துண்டென பொன்னே தில்லாலே.

சந்திர சூரியர் எ. வ. மெட்டு.

## பல்லவி

காமமதால் பலியாகியும் நாமே—கத்தனை மறந்தோமே
இகபரமிரண்டிலு மினியெமக்கார் கதி—
—இறைவனே உன்னையல்லால். (காம)

## தொகையரு

அரனே யுணண்டையுற்றடியேனின் சென்னியி—
—லாதியுன் பாதமதையே
சிரமயிருத்தவுன் திருமலரடிதனை தினமும் நான் தேடுறேனே.

## எடுப்பு

பாபமழிந்து நான்பரகதியெய்திட பரமனே உன்னையல்லால்
யாரெனக்கே கதி ஆதவனே உன தருமலரடி தாராய். (காம)

## தொகையரு

தீதுலகிருந்து நான் செய்திடும் பாவம்—
—திரண்டெனக்கே பாரமாய்
உழலுமென் தன்னை நீ உற்றகை தந்துமே—
—உடன்கரை சேர்த்திடாயே.

## எடுப்பு

முத்தெனப் பேணிடு முதலவனே உந்தன் முனிவதிலாழாமல்
முன்பின்னறிந்திடா முகம்மதுசரீபை நாள்—
—முழுது நீகாப்பாயே. (காம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துதி விருத்தம்

அலிபினில் உலகமதை அமைத்துமே ஆழும்
ஆட்சியை உரைக்கவல்லேன்
அணுவினை உருவதாய் ஆக்கியே அழிப்பதை
அறிவெனக்கொள்ளு மின்னுளில்

அணுவினு மபூர்வமாமற் பறிவினேனிதை
அமைப்பதற் கருள்புரிந்தாய்
அணுவினோடனைத்தையும் ஆதரித்தாளுமுன்
அருளதை இரக்கிறேனே.

## அர்ப்பணிப்பு விருத்தம்

நாலா மெழுத்திலோ ருருவாய்
நாலுவேதத்தினு நபியாம்
நான்குயார்கள் நடு ணியாய்
நாதர் ஹபீபே அருள்புரிவீர்.

சீரார்புகழு முமது மொழி
சிந்தை யிருத்திச் சிரந்தாழ்த்தி
பாரோர் புகழுமுலமாக்கள்
பாலிங் கிதையர்ணர்ப் பணிப்பேன்.

## சந்தம்

ஹாகிமாம் மீராலெவ்வை யருந்தவச் சிரேஸ்ட
பாக்கி யொன்றில்லாத பையனும்
முகம்மது சரீபென் முறைப்பாட்டடங்கும்
கஸ்டம் கடக்கவருள் காவலனே வாழியவே.

**சுபம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org